அசல் வழக்கு எண். 60/2017 நாள்: 08.06.2026

பி.சா.2 திரு. தமிழ்செல்வன்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1) நான் என்ன படித்துள்ளேன் என்றால் I.T.I படித்துள்ளேன். என்ன வேலை பார்க்கிறேன் என்றால் அரசு போக்குவரத்து கழகத்தில் மெக்கானிக் ஆக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். எந்த வருடம் முதல் பணியாற்றினேன் என்றால் 1987–ல் பணிக்கு சேர்ந்தேன் 2017–ல் ஓய்வு பெற்றேன். 1987 லிருந்து 1997 வரை காரைக்குடியை தலைமையிடமாக கொண்ட தேவக்கோட்டை பணிமனையிலும், 1997 முதல் 2017 வரை புதுக்கோட்டை பணிமனையிலும் பணியாற்றினேன். 1987 முதல் 2017 வரை நான் எங்கு பணி செய்தேனோ அங்குதான் குடியிருந்து வந்தேன் என்றால் சரிதான். 2017–ல் ஓய்வு பெற்ற பிறகு தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் எண்.20, சண்முகசுந்தரம் நகர், பள்ளியக்ரஹாரம் என்ற முகவரியில் குடியிருந்து வருகிறேன்.

2) இந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையில் நான் தனியாக கட்சி எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி சதாசிவம் எனக்கு என்ன உறவு என்றால் தம்பி ஆவார். மேற்படி 1ம் பிரதிவாதி வழக்கில் கூறியுள்ள கட்சிகள் அனைத்தையும் நான் ஒப்புக்கொள்கிறேனா என்றால் ஆமாம். தாவா சொத்துக்களின் புல எண் தெரியுமா என்றால் தெரியும், புல எண்.185/2 0.07.0 ஏர்ஸ் எங்களது கட்டுப்பாட்டில் உள்ளது, புல எண்.253/7 0.45.0 ஏர்ஸ் வீரமணி கட்டுப்பாட்டிலும், புல எண்.253/1 0.53 ஏர்ஸ் மருதையன் கட்டுப்பாட்டிலும் உள்ளது. புல எண்.185/2 என்பது எந்த வகையில் எனது கட்டுபாட்டில் உள்ளது என்றால் நான் அதன் உரிமையாளர் என்ற அடிப்படையில எனது கட்டுபாட்டில் உள்ளது. நான் உரிமையாளர் என்ற அடிப்படையில்தான் கட்சி செய்கிறேனா என்றால் ஆமாம்.

3) நான் உரிமையாளர் என்று காட்டுவதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் உண்மையான உரிமையாளர் அல்ல, குத்தகை ஆவணம் எனது பெயரில் உள்ளதால் உரிமையாளர் என்று கூறுகிறேன். நான் குத்தகைதாரர் என்பதற்கு குத்தகை பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் ஏதாவது வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன், சாட்சி பின்னிட்டு அவ்வாறு குத்தகை உரிமை பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை என்று

சாட்சியளிக்கிறார். அவ்வாறு குத்தகை உரிமை பதிவு எனது பெயரில் உள்ளதா என்றால் இல்லை. எனது சகோதரர் 1ம் பிரதிவாதி பெயரில் குத்தகை உரிமை பதிவு உள்ளதா என்றால் இல்லை.

4) தாவா 1ம் இன சொத்திற்கு எனது தகப்பனார் பெயரிலாவது குத்தகை உரிமை பதிவு உள்ளதா என்றால் இல்லை. வேறு எவர் பெயரிலாவது குத்தகை உரிமை பதிவு உள்ளதா என்றால் எனது குடும்ப உறுப்பினர்கள் எவர் பெயரிலும் குத்தகை உரிமை பதிவு இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.6 ஆவணம் என்னால் தாக்கல் செய்யப்பட்டதா என்றால் ஆமாம். மேற்படி பி.சா.ஆ.6 ஆவணம் என்ன ஆவணம் என்றால் காளிமுத்து எனது பெயருக்கு குத்தகையை மாற்றிக் கொடுத்ததற்கான ஆவணம் ஆகும். மேற்படி காளிமுத்து பெயரில் தாவா சொத்து குறித்து குத்தகை பதிவு இருந்ததற்கான ஆவணம் என்னிடம் கொடுக்கப்பட்டு நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.6–ல் நான் மேலே சொன்ன புல எண் ஏதாவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

5) தாவா சொத்திற்கு குத்தகை என்ன என்ற விவரம் பி.சா.ஆ.6–ல் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதேபோல் ஒருபோகமா, இருபோகமா என்றும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து இந்த வாதிகளுக்கு சொந்தமானதுதானா என்றால் ஆமாம். பி.சா.ஆ.6–ல் 1 ஏக்கர் 50 செண்ட்–ல் 17 செண்ட் எனக்கு குத்தகைக்கு கொடுக்கப்பட்டதாக காட்டப்பட்டுள்ளதில் 1 ஏக்கர் 50 செண்டிற்கு புல எண்ணோ, 17 செண்டிற்கு உட்பிரிவு செய்யப்பட்டதாகவோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பி.சா.ஆ.6 ஆவணத்தில் காணப்பட்டுள்ள மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 50 செண்டிற்கு நான்கெல்லை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். பி.சா.ஆ.6 வழக்கிற்காக எங்களால் உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. 1987 முதல் 2017 வரை நான் பணியில்தான் இருந்தேன் என்றால் சரிதான். நான்சொல்வதுபோல் காளிமுத்து தாவா சொத்தின் குத்தகைதாரர் கிடையாது என்பதால் அவர் எனக்கு குத்தகை எழுதிக்கொடுக்க எந்த உரிமையும் கிடையாது என்றாலும், அவ்வாறு நான் தாக்கல் செய்துள்ள பி.சா.ஆ.6 ஆவணம் என்னால் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

6) மேற்படி பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவணங்கள் வழக்கிற்காக என்னால் தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்கள் தயார் செய்யப்பட்ட காலத்தில் நான் அரசுப் பணியில் இருந்ததால் மேற்படி

ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. நான்சொல்வதுபோல் நான் தாவா சொத்தின் குத்தகைதாரர் அல்ல என்றாலும், நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றாலும் சரியல்ல.

ம.வி.இல்லை.

S.d/Tamilselvan

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.06.08 20:05:54 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU